(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ம. சின்னசாமி. பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 119-வது அறிக்கை முதல் 140-வது அறிக்கைகள் வரையிலான மொத்தம் 22 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

இவற்றில், குழுவின் 138-வது, 139-வது மற்றும் 140-வது அறிக்கைகள் அச்சிடப்பட்டு பேரவையில் வைக்கப்படுவதற்கு. போதிய கால அவகாசம் இல்லாததால், இவ்வறிக்கைகளின் படி எடுத்த நகல்கள் பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. இவ் வறிக்கைகளின் நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பெற்று, கிடைக்கப் பெற்றவுடன், உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) அவை உரிமைக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்) உரிமைக்குழுவின் தலைவர்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி: (பேரவை துணைத் தலைவர்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரண்ட் வார இதழ் மீதான அவை உரிமைமீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இரா. வெற்றிகொண்டான் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.